2014 ஆகஸ்ட் 8]

நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாம்பட்டினம் ஊராட்சி, பெருந்தோட்டம் ஊராட்சி ஆகிய இரண்டு ஊராட்சிகளிலுள்ள மீனவ மக்களின் கோரிக்கையான மீன் உலர் களம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 387, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

387—

சாலை அமைத்தல்

***35985—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பரவக்கல் கிராமத்திலிருந்து பேர்ணாம்பட்டு நகரம் வரை வனப் பகுதியில் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, பரவக்கல் கிராமத்திலிருந்து பேர்ணாம்பட்டு நகரம் செல்ல சாலையமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 388, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

388—

மாணவர் விடுதி

*21893—**திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, நடுக்கல்லூர் பகுதியில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். திருநெல்வேலி மாவட்டம், நடுக்கல்லூரிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பேட்டை பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி இயங்கி வருகிறது. இவ்விடுதி நடுக்கல்லூரிலிருந்து விடுதி வசதி கோரும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது. எனவே, நடுக்கல்லூர் பகுதியிலே புதிய பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி துவங்க